# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 09 வியாழக்கிழமை 19.09.2024 கதிர் 365







# நாடு முழுவதிலும் விசேட பாதுகாப்பு களமிறக்கப்பட்ட 63,000 பொலிஸார்

தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நாடு முழுவதிலும் 63,000ற்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அத்துடன், வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக காவலரண்களில் 3,250 விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் ஒன்று கூடல்களை நடத்துவது மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என காவல்துறை பேச்சாளர் நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார். அவசர தேவைகள் ஏற்படும் நிலையில் களமிறங்குவதற்குத் தயாராக முப்படையினரும் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, நாடுமுழுவதிலும் ஒட்டப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சுவரொட்டிகளை அகற்றும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தொகுதி மட்ட தேர்தல் அலுவலகங்கள் நள்ளிரவுடன் அகற்றப்படல் வேண்டும்

### தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உத்தரவு




இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் தொகுதி மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள வேட்பாளர்களின் அனைத்து தேர்தல் அலுவலகங்களையும் அகற்றுவது அவசியம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி இன்று நள்ளிரவு முதல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பிரதான அலுவலகமும், பழைய ஆசனத்திற்கு ஒரு அலுவலகமும் மாத்திரமே திறக்கப்பட முடியும் என தெரிவித்துள்ளார்.

முன்னர் நிறுவப்பட்ட மற்றைய அனைத்து அலுவலகங்களையும் அந்தந்த வேட்பாளர்கள் அகற்ற வேண்டும் என்றும், அகற்றாவிட்டால் பொலிஸாரால் அகற்றப்படும் என்றும் அவர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற ஜனாதிபதித் தேரதல் தொடர்பான விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குகள் எண்ணும் பணி மாலை 04.15 மணியளவில் ஆரம்பமாகும் என்றும், எண்ணி முடிக்கப்பட்ட பின்னர் உரிய முடிவுகளை ஊடகங்களுக்கு வழங்குவதற்கான அனைத்து

6➤

## சமூக வலைத்தளங்கள் மூலமான பிரசாரமா?

### பொலிஸார் கடும் கண்காணிப்பு




சமூக வலைத்தளங்கள் ஊடாக தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்தூவ தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் சமூக ஊடகங்களை

6➤

தேர்தல் பிரச்சாரங்களுக்காக வழங்கப்பட்ட கால அவகாசத்தின் பின்னர்




## பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை

நாளைய தினம் வெள்ளிக்கிழமை அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## தேர்தலை முன்னிட்டு விசேட ரயில் சேவை

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு கொழும்பு கோட்டை மற்றும் காங்கேசந்துறைக்கு இடையே விசேட ரயில் சேவைகளை முன்னெடுப்பதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

6➤

# நள்ளிரவைத் தாண்டியும் நடைபெற்ற கூட்டங்கள்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

தேர்தல்பிரசார நடவடிக்கைகள் நேற்று நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்த போதும் அம்பாறை மாவட்டத்தில் அதிகாலை 2.30 மணிவரை பிரசாரக்கூட்டங்கள் இடம்பெற்றதாகவும் தேர்தல் விதிமீறல்கள் குறித்து அம்பாறை மாவட்டத்தில் இதுவரை 11 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின்மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பெவஸ்ஒப்மீடியா கற்கை நிலையத்தில் இன்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில், "அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை தொகுதியில் 2 முறைப்பாடும் கல்முனை தொகுதியில் 3 முறைப்பாடுகளும் பொத்துவில் தொகுதியில் 3 முறைப்பாடுகளும் அம்பாறை தொகுதியில் இருந்து 3 முறைப்பாடுகள் உட்பட 11 முறைப்பாடுகள் இதுவரை கிடைத்துள்ளது. அதேவேளை தேர்தல்பிரச்சாரம்நேற்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவுற்றாலும் மாவட்டத்தில் இரண்டு மணிவரை சில பிரச்சார கூட்டம் இடம்பெற்றுள்ளது.

சுவரொட்டிகள் அகற்றப்படாத நிலை காணப்படுகின்றது என மாவட்டத்திலுள்ள 115 வாக்களிப்பு நிலையங்களில் 115 நிலைகொள் கண்காணிப்பாளர்களையும் 16 நடமாடும் கண்காணிப்பாளர்களையும் ஒரு தேர்தல் தொகுதிக்கு ஒரு வாகனம் வீதம் 4 தொகுதியிலும் 4 வாகனங்களில் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளதுடன், வாக்கு கணக்கெடுப்பு நிலையத்தில் 10 கண்காணிப்பாளர்கள் கச்சேரியில் இருந்து வாக்கு எண்ண ஆரம்பிக்கும் போது இருந்து வாக்கு எண்ணிமுடியும் வரை கண்காணிப்பில் இருப்பார்கள்.

அதேவேளை இந்த முறை இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணவேண்டிய தேவை ஏற்படும். அப்படியாயின் 15 மணித்தியாலங்கள் தங்கியிருந்து கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள். அதேபோன்று நீண்டநாள் கண்காணிப்பாளர்கள் 4 பேர் நியமிக்கப்பட்டு அவர்கள் மறைமுகமாக கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் என்பதுடன், வேட்பாளர்களின் நிதி செலவு தொடர்பாக ஆராய்வதற்கு 3 பேரை நியமித்துள்ளோம்.

தேர்தல் பிரச்சாரம் நேற்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவுற்றாலும்மாவட்டத்தில்இரண்டு மணிவரை சில பிரச்சார கூட்டம் இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பாக தலைமைக் காரியாலயத்துக்கு அறிவித்துள்ளேன். அதேபோன்று சுவரொட்டிகள்அகற்றப்படாதுள்ளது தொடர்பாக பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலை விட இந்த வருடம் குறைவான முறைப்பாடுகளே கிடைத்துள்ளது. தற்போதைய தேர்தல்சட்ட விதிகளின்படி வாக்குச் சாவடிகளுக்குள் முகவர்கள், கண்காணிப்பாளர்கள்மற்றும் அந்த வாக்குச்சாவடிகளில் பணியாற்றும் பொலிசார், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மட்டும்தான் உள்நுழைய முடியும்" என்றார்.

# புலமைப்பரிசில் பரீட்சை சி.ஐ.டி. விசாரணை

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகள் தொடர்பான விசேட அறிக்கை ஒன்றை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை தொடர்பில் பரீட்சை திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களம் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விசாரணைகள் நிறைவடைந்தவுடன் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருட புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளின் சில வினாக்களுடன் கூடிய மாதிரி வினாத்தாள் அலவ்வ பிரதேசத்தை சேர்ந்த பிரபல மேலதிக வகுப்பு ஆசிரியரினால் வெளியிடப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதன்படி, வினாத்தாள் தயாரித்த நிபுணர்கள் குழுவின் இணக்கப்பாட்டுடன், குறித்த 03 கேள்விகளை நீக்கி இறுதி புள்ளிகளை வழங்க பரீட்சை திணைக்களம் கடந்த 17ஆம் திகதி தீர்மானித்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் நேற்று காலை பரீட்சை திணைக்களத்திற்கு முன்பாக பெற்றோர்கள் குழுவொன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து, பதற்றமான சூழ்நிலையைக் கட்டுப்படுத்த கலகத் தடுப்புப் பிரிவை வரவழைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

பின்னர் ஆறு பெற்றோர்கள் பரீட்சை ஆணையாளருடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர, 05ம் தர புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துவது அவசியமானால் நடத்தப்படும் என தெரிவித்தார்.

இதேவேளை, புலமைப்பரிசில் பெற விண்ணப்பித்த மாணவர்களின் பெற்றோர்கள் குழுவும் இது தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

# ஓமந்தை விபத்தில் இருவர் பலி



வவுனியா ஓமந்தை பகுதியில் புதன்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் சாவடைந்துள்ளனர்.

ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி மோட்டார்சைக்கிளில் வந்துகொண்டிருந்த இருவர் ஓமந்தை எரிபொருள் நிரப்புநிலையத்திற்கு அண்மையில் சென்றுகொண்டிருந்த போது வீதியில் நின்ற ஒருவருடன் மோதியதில் விபத்து இடம்பெற்றது. விபத்தில் பலத்த காயமடைந்த இருவரும் வீதியால் சென்றவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும் அவர்கள் ஏற்கனவே மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் ஓமந்தை பன்றிகெய்தகுளம் பகுதியை சேர்ந்த சங்கீதன் (வயது 40) முல்லைத்தீவு பகுதியைசேர்ந்த யோகராசா (வயது 42) ஆகியோரே சாவடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV
YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# வாக்காளர் அட்டைகள் கிடைக்கவில்லையா?




உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள், அருகில் உள்ள அஞ்சல் நிலையங்களுக்குச் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என அஞ்சல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைச் சமர்ப்பித்து காலை 8 மணி முதல்மாலை 5 மணிவரையான காலப்பகுதியில் வாக்காளர் அட்டையைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அஞ்சல் நிலையங்களில் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தகுதி பெற்ற அனைவருக்கும், ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கான வாய்ப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இல்லாத வாக்காளர்கள், வாக்களிப்பு நிலையத்தில் செல்லுபடியாகும் அடையாள அட்டையைக் காண்பித்தும் வாக்களிக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதனைவிட, தேர்தல் திணைக்களத்தின் இணையத் தளத்தில் இருந்தும் உங்களுடைய ஆள் அடையாள இலக்கத்தைக் கொடுத்து வாக்காளர் அட்டையை தரவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டி

# வட, கிழக்கு மாணங்களில் 22 இலட்சம் வாக்காளர்கள்

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் 2024 தேர்தல் வாக்காளர் இடாப்பின்படி , வடக்கு கிழக்கு மாகாணங்களில் 22 இலட்சத்து 20311 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 இலட்சத்து 49686 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 5 இலட்சத்து 55432 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 3 இலட்சத்து 15925 பேரும் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ் மாவட்டம் 4 இலட்சத்து 92,280 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 1,00,907 பேரும், வவுனியாவில் 1,28,585 பேரும், மன்னார் 90, 607 பேரும், முல்லைத்தீவு 86,889 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.




# ஏ கே எஸ் அகாடமியின் பரிசளிப்பு விழா

(சம்மாந்துறை நிருபர் தில்சாத் பர்வீஸ்)

ஏ கே எஸ் அகாடமியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மிக விமர்சையாக அதன் பணிப்பாளர் பா.சாஜிதா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக அல்ஹசீனா பிரைடல் என்ட் அகாடமியின் பணிப்பாளர் டாக்டர் அல்ஹசீனா அவர்களும் மற்றும் டெலன் ஹப் அகாடமியின் பணிப்பாளர் திருமதி பஸ்லிஹா அவர்களும் இன்னும் பல அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் ஏ கே எஸ் அகாடமியில் கல்வி கற்ற மாணவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ்கள் மற்றும் போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெற்றது.

# ஓய்வுதியர் சங்கம் முன்வைத்த கோரிக்கை


அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலுமுள்ள முதியோர் மற்றும் சிரேஸ்ட பிரஜைகளுக்கு தமது தேவையை நிறைவேற்றுவதற்காக வரும் சேவை நிலையங்களில் முன்னுரிமை வழங்கி அவர்களின் தேவைகளை விரைவாக நிறைவேற்றி கொடுக்குமாறு சாய்ந்தமருது ஓய்வுதியர் சங்கம் கேட்டுள்ளது.

தமது வாழ் நாளில் பலவிதமான திணைக் களங்களிலும்பாடசாலைகளிலும்சேவையினை செய்து தற்போது வயது சென்று ஓய்வான நிலைமையில் தமக்கேற்படும் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அரச திணைக்களங்கள் , பிரதேச செயலகங்கள் , தபாலகம் , வைத்தியசாலை , பொலிஸ் நிலையம் , நூலகம் , இலங்கை மின்சார சபை மற்றும் வங்கிகளுக்கு செல்லும் போது நீண்ட நேரம் வரிசைகளில் காத்திருக்க வேண்டியிருப்பதால் பலவிதமான கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனால் முதியோர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு மதிப்பளித்து அவர்களின் தேவைகளை உரிய வேளைக்கு நிறைவேற்றிக் கொடுக்க திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென ஓய்வுதியர் சங்கம் கேட்டுள்ளது. இதே வேளையில் சில சேவை நிலையங்களில் முதியோர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளுக்கென தனியான பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளமைக்குதமது நன்றியினையும் ஓய்வுதிர் சங்கம் தெரிவித்துள்ளது.




# அதிவேக நெடுஞ்சாலையில் கவிழ்ந்த கனரக வாகனம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பின்னதுவைக்கும் பத்தேகமவுக்கும் இடையில் இன்று வியாழன் காலை கொள்கலன் பாரவூர்தி ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

கொள்கலன் வாகனத்தின் பின்பகுதியில் இரண்டு டயர்கள் வெடித்ததன் காரணமாக சாரதியால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் கொள்கலன் கவிழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து கொழும்பு நோக்கிச் செல்லும் இரண்டு பாதைகளில் ஒரு பாதை தடைப்பட்டுள்ள போதிலும், மற்றைய பாதையில் வாகனப் போக்குவரத்து வழமையாக இடம்பெறுவதாக அறிவிக்கப்படுகிறது.






# ப்ரிக்ஸில் இணைவதற்கு துருக்கி முற்படுகின்றதா?

## பின்னணியில் இடம்பெறும் இராஜதந்திர நகர்வுகள்

"ப்ரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உட்பட அனைத்து முக்கிய அமைப்புகளிலும் துருக்கி உறுப்பினராக விரும்புவதாக எங்கள் அதிபர் தெளிவாகக் கூறியுள்ளார்" என்று துருக்கி அதிபரான ரிசெப் தையிப் எர்துவானின் ஆளும் கட்சி செய்தித் தொடர்பாளர் ஓமர் செலிக் கூறினார்.

ப்ரிக்ஸ் கூட்டமைப்பில் சேர துருக்கி முறைப்படி விண்ணப்பித்துள்ளதா என்பது குறித்து அவர் தெளிவாக உறுதிப்படுத்தவில்லை. ஆனால் அதற்காக 'தொடர்ச்சியாக முயற்சி' எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

அக்டோபர் 22 - 24ஆம் தேதிகளில் மேற்கு ரஷ்யாவில் உள்ள கசான் நகரத்தில் நடைபெறவுள்ள ப்ரிக்ஸ் நாடுகளின் கூட்டத்தில், புதிய உறுப்பினர்களை சேர்ப்பது பற்றிய முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ப்ரிக்ஸ் கூட்டமைப்பில் சேர துருக்கிக்கு அழைப்பு விடுக்கப்பட்டால், மேற்கத்திய நாடுகள் அல்லாத ரஷ்யா மற்றும் சீனா அங்கம் வகிக்கும் பொருளாதாரக் கூட்டணியில் உறுப்பினராகும் முதல் நேட்டோ உறுப்பு நாடு என்ற பெருமையை துருக்கி பெறும்.

"இது, துருக்கி மற்றும் ப்ரிக்ஸ் கூட்டமைப்புக்கு மட்டுமின்றி நேட்டோ மற்றும் மேற்கத்திய நாடுகளின் கூட்டமைப்புக்கும் ஒரு அடையாளமாகவும், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கும்", என்று துருக்கி-ரஷ்யா உறவுகள் சார்ந்த நிபுணர் கெரிம் ஹாஸ் கூறுகிறார்.

தற்போது துருக்கி கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. அதைக் கருத்தில் கொண்டால், அந்நாட்டிற்கு வெளிநாட்டு முதலீடுகள் தேவை, அதற்காக பிற நாடுகள் உடனான உறவை அது பன்முகப்படுத்த வேண்டியிருக்கிறது என்று அவர் குறிப்பிடுகிறார்.

உக்ரைன்மீது முழு வீச்சில்போரைத்தொடங்கியதற்காக ரஷ்யா மீது விதிக்கப்பட்ட தடைகளில்துருக்கி பங்கேற்காமல் இருப்பதை, இதற்காகத்தான் ஐரோப்பிய நாடுகள் கண்டுகொள்ளாமல் செயல்படுகின்றன என்று அவர் குற்றம் சாட்டினார்.

"அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளைப் பற்றிய பார்வையை இதுவரை உறுப்பினாராகாத துருக்கி, ப்ரிக்ஸ் கூட்டமைப்பிற்கு வழங்கலாம். இது மேற்கத்திய நாடுகள் அல்லாத ப்ரிக்ஸ் கூட்டமைப்பு, மேற்கத்திய நாடுகளை எதிர்க்கும் அமைப்பாக மாறுவதைத் தடுக்க வழிவகுக்கும்."

முதலில் ப்ரிக் (BRIC) என்று அழைக்கப்பட்டு, வளரும் பொருளாதாரங்களின் அமைப்பாக இது உருவாக்கப்பட்டது. இது பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளால் 2006ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மேலும் 2010ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா இணைந்தபோது, இக்கூட்டமைப்பு அதன் பெயரை ப்ரிக்ஸ் (BRICS) என மாற்றியது.

வட அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பாவின் வளமான நாடுகளில் உள்ள அரசியல் மற்றும் பொருளாதார சக்திக்கு சவாலாக இருப்பதற்காக, உலகின் மிக முக்கியமான வளர்ந்து வரும் நாடுகளை ஒன்றிணைக்கும் வகையில் ப்ரிக்ஸ் கூட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டமைப்பில், சமீபத்தில் ஒரு பெரிய விரிவாக்கம் நடந்தது. அதன் பிறகு இரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் உறுப்பினராக இணைந்தன.

இந்தக் கூட்டமைப்பில் இணையும் முடிவை சௌதி அரேபியா பரிசீலித்து வருவதாகக் கூறியுள்ளது மற்றும் அஜர்பைஜான் இதற்காக முறையாக விண்ணப்பித்துள்ளது.

துருக்கியும் பல மாதங்களுக்கு முன்பு ப்ரிக்ஸ் கூட்டமைப்பில் சேர அதிகாரப்பூர்வமாக விண்ணப்பித்துள்ளதாக ப்ளூம்பெர்க் செய்தி நிறுவனம் கடந்த திங்கட்கிழமை அன்று தெரிவித்தது.

கடந்த 2018ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கில் நடந்த 10வது ப்ரிக்ஸ் உச்சிமாநாட்டில், துருக்கி ப்ரிக்ஸ் உறுப்பினராக விரும்புவதாக அந்நாட்டின் அதிபர் எர்துவான் தெரிவித்திருந்தார்.

இருபது ஆண்டுகளாக துருக்கியின் அதிபராக எர்துவான் உள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினராக இருப்பதில் துருக்கிக்கு எந்த ஒரு முன்னேற்றமும் இல்லை என்று அவர் எண்ணினார். இதனால் துருக்கி, மேற்கு மற்றும் கிழக்கில் உள்ள நாடுகளுடனும் "ஒரே நேரத்தில்" தனது உறவுகளை மேம்படுத்த வேண்டும் என்று கூறி வருகிறார்.

ப்ரிக்ஸ் கூட்டமைப்பில் துருக்கி இணைவதை ரஷ்யா வலுவாக ஆதரிப்பதாக கெரிம் கருதுகிறார்.

உக்ரைனுடன் போரில் தாக்குப் பிடிக்கவும், மேற்கத்திய பொருளாதாரத் தடைகளின் கீழ் ரஷ்ய பொருளாதாரம் வீழ்ச்சியடையாமல் இருப்பதை உறுதி செய்வதும், அதன் பொருளாதாரத்தை நிலையானதாக வைத்திருப்பதும் ரஷ்யாவின் முதன்மையான நோக்கமாக உள்ளது", என்று அவர் கூறுகிறார்.

"எனவே ரஷ்யா எப்போதும் துருக்கியை நெருக்கமாக வைத்திருக்க விரும்புகிறது. ஆற்றல், வர்த்தகம், சுற்றுலா போன்ற பல துறைகளில் இருநாடுகளுக்கு இடையே ஒப்பந்தங்கள் இருக்கின்றன. ஒரு நேட்டோ உறுப்பு நாட்டுடன் நன்மை பயக்கும் அளவுக்கு நெருங்கிய உறவை வளர்த்துக்கொள்ள முடியும் என்பதை நிரூபிப்பது ரஷ்யாவிற்கு பலன் அளிப்பதாக இருக்கும்," என்றார்.

ப்ரிக்ஸ், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் பிற கூட்டமைப்புகளில் இணைய துருக்கி அதிக ஆர்வம் கட்டி வருவது, அதன் கருத்தியல் மாறுபாடாக நாம் பார்க்கக்கூடாது என்று அமெரிக்காவின் வில்சன் சென்டர் எனப்படும் ஒரு திட்டக்குழுவைச் சேர்ந்த யூசுப் கேன் கூறுகிறார்.

"இதுபோன்ற கூட்டமைப்புகளில் தனது உறுப்பு நாடு இருப்பது நேட்டோ அமைப்பிற்குப் பலன் அளிப்பதாக இருக்கலாம்," என்று அவர் தெரிவித்தார்.

துருக்கியில் உள்ள கடும் பொருளாதார நெருக்கடியும், வெளிநாட்டு முதலீடு சார்ந்திருக்கும் நிலையும், கடன் நிதியுதவியைச் சார்ந்திருப்பது போன்றவையின் காரணமாக துருக்கி உலக அரசியலில் சமநிலையில் இருக்க விரும்புகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் தகவல்களின்படி, உலகின் 17வது பெரிய பொருளாதாரமாக துருக்கி இருக்கிறது.

சர்வதேச அமைப்பின் புள்ளிவிவரங்களின்படி, அதிகாரப்பூர்வ வருடாந்திர சில்லறை விலைப் பட்டியலில் ஜிம்பாப்வே, அர்ஜென்டினா, சூடான் மற்றும் வெனிசுலாவுக்கு அடுத்து 71.6% உடன் துருக்கி இருக்கிறது.

சமீபத்தில் துருக்கியில் எடுக்கப்பட்ட அனைத்து கருத்துக் கணிப்புகளும், அந்நாட்டு மக்களுக்கு மிகுந்த சுமையாக விலைவாசி உயர்வு இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

வளர்ச்சியை வலியுறுத்தி, கடனுக்கான வட்டி விகிதத்தைக் குறைவாக வைத்திருக்க துருக்கியின் மத்திய வங்கிக்கு அந்நாட்டின் அதிபர் ரிசெப் தையிப் எர்துவான் அறிவுறுத்தினார். அவர் வட்டி விகிதத்தினால்தான் பணவீக்கம் ஏற்பட்டதாகக் கருதினார்.

ஆனால், அவர் கடந்த ஓராண்டாக அந்நாட்டின் பொருளாதாரக் கொள்கையை மாற்றியுள்ளார். புதிய பொருளாதாரக் கொள்கை மிகவும் பழமைவாத பாதையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, துருக்கி மத்திய வங்கியின் புதிய வாரியம் ஒன்பது மாதங்களில் வட்டி விகிதங்களை 8.5%-இல் இருந்து 50% வரை உயர்த்தியுள்ளது.

அதிகப்படியான உள்நாட்டு தேவை மற்றும் ஊதிய உயர்வு என்ற நோக்கம் கொண்ட சிம்செக்கின் பழமைவாத பொருளாதார திட்டம்தான் பணவீக்கம் ஏற்பட முக்கியக் காரணமாக இருக்கிறது. அது பயனுள்ளதாக இல்லை என்பதை இது குறிக்கிறது."

வருங்காலத்தில் துருக்கியின் பொருளாதாரத்திற்கு என்ன நடக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

"இருப்பினும், பணவீக்கம் குறைவதால் விலைவாசியில் உள்ள நெருக்கடியான நிலை முடிந்துவிட்டதாகக் கருத முடியாது. ஊதிய உயர்வு அல்லது கீழ் வகுப்பினருக்கான உரிய பொருளாதார ஆதரவு வழங்கப்படாத வரை, இந்த இக்கட்டான நிலை தொடரும்."

மேற்கத்திய நாடுகள் அல்லாத பொருளாதாரக் கூட்டணிகளில் துருக்கி இணைந்தால், அது அந்நாட்டில் உள்ள பொருளாதாரத்தை சமநிலைப்படுத்த உதவும். ஆனால், அரசியல் ரீதியான பலனுக்காகவும், அதிபர் எர்துவானின் 360 டிகிரி வெளியுறவுக் கொள்கையின் உத்தியை செயல்படுத்துவதுமே ப்ரிக்ஸ் கூட்டமைப்பில் துருக்கியின் நோக்கமாக உள்ளது.

(பி.பி.சி.)

# வேட்பாளர்கள் எவரும் 50 வீதம் பெறமுடியாத நிலை வரலாம்!

## விருப்பு வாக்கை கணிப்பிடுவதற்கு தயாராகும் தேர்தல் ஆணைக்குழு




ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் 50 வீதத்தை பெற்றுக கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லையெனவும் அதிக வாக்குகளை பெற்றுக் கொள்ளும் வேட்பாளர் குறைந்தது 53 இலட்சம் வாக்குகளையே பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதான வேட்பாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் இம்முறை 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்றுக்கொள்வதில் நெருக்கடி உள்ளது.

அதிக வாக்குகளை பெற்றுக் கொள்ளும் வேட்பாளர் ஒருவர் குறைந்தது அதிகபட்சமாக 53 இலட்சம் வரை செல்வதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது அதிகபட்ச வாக்குகளை பெற்றுக் கொள்ளும் வேட்பாளர் 35 40 இலட்சம் வரையான வாக்குகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமைகளால் பிரதான வேட்பா ளர்களாக அடையாளம் காணப்பட்ட எவராலும் 50 வீதத்தை பெற்றுக்கொள்ள முடியுமா என்ற சந்தேகம் உருவாகியுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இந்தப் பின்னணியில் அனைத்து வாக்கு எண்ணும் நிலையங்களிலும் இரண்டாம் விருப்பு வாக்கு எண்ணுவதற்கு தேவையான ஏற்பாடுகளை தயார் செய்யுமாறு அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தொகுதி தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு கடிதம் அனுப்பியுள்ளது.

அதன்படி, கூடுதல் அதிகாரிகளை தயார்படுத்தும் பணியில் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தொகுதி தேர்தல் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் 13,421 வாக்களிப்பு நிலையங்களில் நடைபெறவுள்ளது. வாக்கு எண்ணிக்கைக்கு தயார் நிலையில் உள்ள வாக்கு எண்ணிக்கை நிலையங்களின் எண்ணிக்கை 1,274 ஆகும்.

வாக்குச்சாவடிகளில் காவல்துறை அதிகாரிகளுக்கு மேலதிகமாக காவல்துறை சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகளும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்கள்




ஜனாதிபதித் தேர்தலின் வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள 41 நிலையங்கள் மாவட்டத்தின் 511 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப் பெட்டிகளையும், வாக்குச் சீட்டுக்களையும், அதற்குரிய இதர ஆவணங்களையும் விநியோகிக்கும் மற்றும் கையேற்கும் நிலையமாகச் செயற்படவுள்ளது.

அந்த நிலையங்களுக்கு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாகவும் மற்றும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்ட அலுவலகர்களின் பங்களிப்பு காத்திரமானது என யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்குப்பெட்டி விநியோகித்தல் மற்றும் கையேற்றல் கடமையில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான செயலமர்வு நேற்று புதன்கிழமை காலை யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

20 ஆம் திகதி காலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு உரிய வகையில் வாக்குப் பெட்டிகளையும், வாக்குச் சீட்டுக்களையும், இதர ஆவணங்களையும் கையளிக்கும் அதேவேளை 21 ஆம் திகதி வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவர்களால் கையளிக்கப்படவுள்ள வாக்குப் பெட்டிகளையும், இதர ஆவணங்களையும் உரிய வகையில் பெற்றுக் கொள்வதில் மிக வினைத்திறனாகச் செயற்பட வேண்டும்.

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு நீதியாகவும், சுதந்திரமாகவும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற சிறப்பான ஒத்துழைப்பை வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் வாக்குப்பெட்டி விநியோகித்தல் மற்றும் கையேற்றல் கடமைகளில் ஈடுபடவுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக விளக்கமளித்தார்.



## தொகுதிமட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், பிரதான வாக்குகளை எண்ணும் பணிகள் இரவு 7 மணிக்கு ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ முடிவுகள் கிடைக்கும் வரை உத்தியோகபூர்வமற்ற முடிவுகளை வெளியிடுவதைத்தவிர்க்குமாறும்அவர்அனைவரையும் கேட்டுக்கொண்டதோடு, ஜனாதிபதித் தேர்தலில் தனது விருப்பத்தை எவ்வாறு சரியாகக் குறிப்பிடுவது என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

அதன்படி, விரும்பும் வேட்பாளருக்கு வாக்களிக்க, வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னத்தின் முன் பகுதியில் '1' என்ற எண்ணைக் குறிக்க வேண்டும்.

'2' மற்றும் '3' என்ற எண்களை குறியிட்டு, தனக்கு விருப்பமான மற்ற வேட்பாளர்களுக்கு இரண்டாவது மற்றும் மூன்றாவது முன்னுரிமை அளிக்கலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சமுக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயன்படுத்துபவர்களுக்கு எதிராகவும் சட்டம் அமுல்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் பாதுகாப்பை முன்னிட்டு 63,000 இற்கும்அதிகமான பொலிஸ்உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக நிஹால் தல்தூவ கூறியுள்ளார்.நேற்று) வரை தேர்தல் தொடர்பில் 449 முறைப்பாடுகள் பதிவானதுடன், அதில் 309 முறைப்பாடுகள் தேர்தல் சட்டமீறல்களாகும். முறைப்பாடுகளுடன் தொடர்புடைய 108 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கமைய, தேர்தல் பணிகளில் பங்கேற்கும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இந்த ரயில்களில் பயணிக்க முடியும்.இன்றும் நாளை மறுதினமும் காலை 9 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரை விசேட ரயிலொன்று போக்குவரத்தில் ஈடுபடவுள்ளது. நாளை) மற்றும் எதிர்வரும் 22ஆம் திகதிகளில் காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு கோட்டை வரை 2 விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தல் நடைபெறும் 21ஆம் திகதி வழமையான நேர அட்டவணையின் பிரகாரம் ரயில்கள் சேவையில் ஈடுபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, தூர சேவை ரயில்கள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், குறுகிய தூரங்களுக்கான ரயில் சேவைகள் குறைக்கப்படலாம் என ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# தனியார் ஊழியர்கள் வாக்களிக்க ஏற்பாடு

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தனியார் தொழில் நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவது குறித்து, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

இதற்கிணங்க, தொழில் நிறுவனத்திலிருந்து 40 கிலோ மீற்றருக்குட்பட்ட தூரம் செல்ல வேண்டிய வாக்காளருக்கு 1ஃ2 நாள் விடுமுறையும், 40 - 100 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டிய வாக்காளர்களுக்கு முழு நாள் விடுமுறையும் வழங்கப்பட வேண்டும் என, அவர் அறிவுறுத்தியுள்ளார். அத்துடன், 100 - 150 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டிய வாக்காளருக்கு 1 1ஃ2 நாள் விடுமுறையும், 150 கிலோ மீற்றருக்கு அதிகமான தூரத்தையுடைய வாக்காளர்களுக்கு 2 நாள் விடுமுறையும் வழங்கப்படல் வேண்டும் எனவும், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தனியார் தொழில் நிறுவனங்களுக்கு மேலும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.









# உங்களுடைய கைப்பேசிகளை கொண்டு செல்ல வேண்டாம்

"இந்த முறை பரபரப்பான ஜனாதிபதித் தேர்தல் என்பதால், சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுமாறு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க அனைத்து தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"இதன்படி, வாக்களிக்கும் காலப்பகுதியில், வாக்காளர் அல்லது வேட்பாளர் ஒருவர், தனது தொலைபேசியை வாக்களிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. மீறினால், அவர் குற்றவாளியாகக் கருதப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார். இவ்வாறானவர்கள் கைது செய்யப்படுவதற்கும் இடமுண்டு" என்றும் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், "வாக்களிப்பு நேரத திற்குள், எந்தவொரு வாக்காளரும் அல்லது வேட்பாளரும், தமது தொலைபேசிகளுடன் வாக்குச் சாவடிக்கு செல்லக் கூடாது என்று தடை விதித்துள்ளோம். அவர்கள் அங்கே புகைப்படம் எடுப்பது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தபால் வாக்களிப்பின்போது, இவ்வாறு வாக்குச் சீட்டுக்களைப் புகைப்படம் எடுத்தவர்கள், தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். இது மிகவும் பரபரப்பான தேர்தலாகும். எனவே, யாரும் இவ்வாறு செய்யாமல் இருக்குமாறு அறிவுறுத்துகின்றேன்" என்றார்.

# 5 ஆயிரத்தை எட்டும் முறைப்பாடுகள்

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 4,945 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1,515 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 3,289 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 33 முறைப்பாடுகளும் 107 ஏனைய விடயங்கள் தொடர்பில் முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

# ஒரே நேரத்தில் வெடித்த பேஜர்கள்! இஸ்ரேலின் திட்டமிட்ட தாக்குதலா?

லெபனானில் ஹெஸ்பொலா அமைப்பால் பயன்படுத்தப்பட்ட பேஜர்கள் வெடித்ததில் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். செவ்வாயன்று நாடு முழுவதும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் பேஜர்கள் வெடித்து சிதறின.

இதில் ஒன்பது பேர் பலியாகினர். 2,800 பேர் காயமடைந்தனர், அவர்களில் பலர் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர்.

இந்த சம்பவத்தில் ஹெஸ்பொல்லா இஸ்ரேலைக் குற்றம் சாட்டியுள்ளது. ஆனால், தாக்குதல் எவ்வாறு நிகழ்ந்தது என்பது பற்றி தெளிவாகத் தெரியவில்லை. இஸ்ரேலிய அதிகாரிகள் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.



செவ்வாய்க்கிழமை உள்ளூர் நேரப்படி சுமார் 15:45 மணியளவில் லெபனான் தலைநகர் பெய்ஷ்ரூட் உட்பட நாட்டின் பல பகுதிகளில் பேஜர்கள் வெடிக்கத் தொடங்கியது. பட்டாசுகள் போன்றும் துப்பாக்கிச்சூடு போன்றும் சிறிய வெடிப்புகள் நிகழ்வதற்கு முன்னதாக, சிலரில் பாக்கெட்டுகளில் இருந்து புகை வருவதைக் கண்டதாக சாட்சிகள் தெரிவித்தனர்.

ஆரம்பத்தில் சிறியளவில் வெடிக்கத் தொடங்கியது பின்னர் சுமார் ஒரு மணி நேரம் இது தொடர்ந்தது என்று ராய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது. அதன் பின்னர் ஏராளமான மக்கள் லெபனான் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் குவிந்தனர். மருத்துவமனைகளில் மக்கள் கூட்டம் நிரம்பி, குழப்பமான சூழல் நிலவியதாக நேரில் பார்த்த சாட்சிகள் தெரிவித்தனர்.

செவ்வாய் கிழமை நடந்த தாக்குதலின் அளவை குறிப்பிட்டு ஆய்வாளர்கள் அதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

பேஜர் பட்டரிகள் அதிக வெப்பமடைவதற்கு ஹஹேக்கிங்' காரணமாக இருக்கலாம், இதனால் சாதனங்கள் வெடித்திருக்கலாம் என்று சிலர் கூறினர். இதுபோன்ற செயல் முன்னெப்போதும் நிகழாத ஒன்று. பட்டரிகள் அதிக வெப்பமடைந்து அது நிகழ்ந்திருப்பதாக தெரியவில்லை என்று கூறினர்.

மாற்றாக, பிற ஆராய்ச்சியாளர்கள் பேஜர்கள் தயாரிப்பு அல்லது விநியோகத்தின் போது தாக்குதல் நடக்கும் வகையில் மாற்றப்பட்டிருக்கும் என்று வாதிடுகின்றனர்.

'சப்ளை செயின்' தாக்குதல்கள் இணைய பாதுகாப்பு உலகில் வளர்ந்து வரும் பிரச்னையாக உள்ளது, சமீபத்தில் ஹேக்கர்கள் சில சாதனங்களை அவற்றின் தயாரிப்பின் போதே அணுகி அவற்றை மாற்றி அமைக்கின்றனர். இதன் மூலம் பல உயர்மட்ட சம்பவங்கள் ஏற்படுகின்றன.

ஆனால் இந்த தாக்குதல்கள் பொதுவாக மென்பொருள் சார்ந்து இருக்கும். வன்பொருள் சார்ந்த விநியோகச் சங்கிலி தாக்குதல்கள் மிகவும் அரிதானவை, ஏனெனில் சாதனத்தில் நேரடியாக மாற்றங்கள் செய்ய வேண்டி இருக்கும்.

இது விநியோகச் சங்கிலி தாக்குதலாக இருக்கும் பட்சத்தில், பேஜர்களை ரகசியமாக சேதப்படுத்தும் ஒரு பெரிய நடவடிக்கை நிகழ்ந்திருக்கும்.

ஒரு முன்னாள் பிரிட்டிஷ் ராணுவ ஆயுதங்கள் நிபுணர், இந்த சாதனங்கள் ஒவ்வொன்றிலும் 10 முதல் 20 கிராம் வரை ராணுவ உயர்தர வெடிமருந்துகள் நிரப்பி வைக்கப்பட்டிருக்கலாம். போலி மின் சாதனக் கூறுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம்” என்றார். ஒரு எண்ணெழுத்து குறுஞ்செய்தி இதற்கு ஒரு சமிக்ஞையாக செயல்பட்டிருக்கும் என்று நிபுணர் கூறினார்.

இந்த தாக்குதலில் உயிரிழந்த இருவர் ஹெஸ்பொலா எம்.பி.க்களின் மகன்கள் என்று ஹெஸ்பொலாவுக்கு நெருக்கமான வட்டாரம் ஏஎஃப்பி இடம் தெரிவித்தது. ஸ்பொலா உறுப்பினர் ஒருவரின் மகள் கொல்லப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் லெபனானுக்கான ஈரான் தூதர் மொஜ்தபா அமானியும் அடங்குவார். அவருக்கு லேசான காயங்கள் ஏற்பட்டிருப்பதாக ஈரானிய ஊடகங்களில் செய்திகள் தெரிவிக்கின்றன.

லெபனான் பொது சுகாதார அமைச்சர் ஃபிராஸ் அபியாட் கூறுகையில், பெரும்பாலானவர்களுக்கு கைகள் மற்றும் முகத்தில் காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றார். “பெரும்பாலான காயங்கள் முகம், கண்கள் மற்றும் கைகளில் ஏற்பட்டன. சிலருக்கு விரல் அல்லது கைகள் துண்டிக்கப்பட்டன ” என்றார்.

அவர் மேலும் கூறியதாவது: “அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படும் பெரும்பான்மையான மக்கள் சிவில் உடையில் உள்ளனர், எனவே அவர்கள் ஹெஸ்பொலா போன்ற ஒரு குறிப்பிட்ட அமைப்பைச் சேர்ந்தவர்களா என்பதைக் கண்டறிவது மிகவும் கடினம். அதே சமயம் படுகாயமடைந்தவர்களில் வயதானவர்கள், சிறிய குழந்தைகள் ஆகியோரும் அடக்கம். துரதிர்ஷ்டவசமாக குழந்தை இறந்ததையும் பார்க்க முடிந்தது. காயமடைந்தவர்களில் சிலர் சுகாதாரப் பணியாளர்களாக உள்ளனர்” என்று அமைச்சர் கூறினார்.

லெபனானுக்கு வெளியே, அண்டை நாடான சிரியாவில் இதேபோன்ற வெடிப்பு சம்பவத்தில் 14 பேர் காயமடைந்துள்ளனர் என்று பிரிட்டனை தளமாகக்கொண்ட ஹமனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம்' என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்





# கிழக்கும் மலையகமும் சந்தித்த கால் பந்தாட்ட சமர் சமனிலை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் ஒழுங்கமைப்பில் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணியினருக்கும் ஹட்டன் உதைபந்தாட்ட லீக் அணியினருக்குமான நட்பு ரீதியிலான கால்பந்தாட்ட போட்டி நடைபெற்றது.

கால்பந்தாட்டப் போட்டியில் இரு அணிகளும் 1-1 என்ற கோல் அடிப்டையில் சமநிலையில் நிறைவடைந்தது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இரு அணியினருக்கும் கிண்ணத்தை வழங்கி கௌரவித்தார்.



# சம்மாந்துறையில் மாவட்ட ஆங்கில தினப் போட்டி

கல்முனைக் கல்வி மாவட்டமட்ட ஆங்கில தினப் போட்டி இன்று புதன்கிழமை சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

சம்மாந்துறை கல்வி வலயம் ஏற்பாடு செய்த மாவட்டமட்ட போட்டிகளின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிலோபரா, பி. பரமதயாளன், எச்.நைஷரூஸ்கான்,எம். சியாட், ஏ.பார்த்தீபன், ஏ.றியாசா, எம். நௌபர்டீன், உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய நான்கு வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்ற நிகழ்வில் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் வரவேற்புரை நிகழ்த்த வளவாளர் கே.குணரத்ன விளக்க உரை நிகழ்த்தினார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.09.2024இல் வெளியிடப்பெற்றது.